பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
28 07 2026 TUESDAY 6.30 PM
<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பொதுத்தேர்வு முறைகேடுகளை தடுப்பதற்கான சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது.
- கர்நாடகம், தமிழகத்திற்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் 15 நாட்களுக்கு விடுவிக்குமாறு காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக்குழு உத்தரவிட்டுள்ளது.
- பேரிடர் மேலாண்மை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு 50 கோடி ரூபாய் சுழற்சி நிதி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- உலகக் கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் Sonam Uttam Maskar - Himanshu Dhillon இணை வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

இனி விரிவான செய்திகள்--

<<<<<<<<>>>>>>

தேர்வு முறைகேடுகளை தடுப்பதற்கான பொதுத்தேர்வு சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனை தாக்கல் செய்து பேசிய மத்திய பணியாளர் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், நாட்டில் உள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் நலனை பாதுகாக்க வேண்டும் என்ற உறுதிபாட்டுடன் இந்த சட்டத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் எந்தவொரு செயலையும் அனுமதிக்கக் கூடாது என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலும் இது அமைந்துள்ளதாக கூறினார்.

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் இந்த சட்டம் ஒரு மைல்கல்லாக அமையும் என்றும் அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி செய்தபோது நடைபெற்ற வினாத்தாள் கசிவு சம்பவங்களையும் அவர் பட்டியலிட்டார்.

அப்போது இதனை தடுப்பதற்கு எந்தவொரு முயற்சியையும் அவர்கள் செய்யவில்லை என்றும் திரு ஜிதேந்திர சிங் குற்றம் சாட்டினார்.

ஆனால், பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 2024-ஆம் ஆண்டு கொண்டுவந்த பொதுத்தேர்வு முறைகேடு தடுப்புச் சட்டம், விரைந்து நீதி கிடைக்க வழிவகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற வினாத்தாள் கசிவு சம்பவங்களை ஆய்வு செய்த பிரதமர், இதனை தடுக்க தனியாக சட்டம் கொண்டுவரத் தேவையில்லை என முடிவடுத்ததாகவும், நடைமுறையில் உள்ள சட்டத்தையே வலுப்படுத்துவதன் மூலம் முறைகேட்டை தடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

தற்போது இந்த சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள் மேலும் வலிமையுடன் வினாத்தாள் கசிவு முறைகேடுகளை தடுப்பதற்கு துணை புரியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசு நடத்தும் தேர்வுகள் மீது நம்பகத்தன்மையை உறுதி செய்யும் வகையில் இந்த திருத்தங்கள் அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய திருத்தங்கள், தேர்வு முறைகேட்டில் ஈடுபடுபவர்களுக்கு பத்தாண்டு சிறை தண்டனை மற்றும் பத்து கோடி ரூபாய் அபராதம் விதிக்க வகை செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பான வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாணும் வகையில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் விரைவு நீதிமன்றங்கள் அமைக்க வகை செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

காவல்துறையினர் இதுதொடர்பான வழக்குகளை இரண்டு மாதத்திற்குள் விசாரித்து நீதிமன்றங்களுக்கு கொண்டு சென்று மூன்று மாதங்களுக்குள் நீதி கிடைக்க வழி ஏற்பட்டுள்ளதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு கௌரவ் கோகோய், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கல்வித்துறைக்கு முக்கியத்துவம் அளித்து ஆக்கப்பூர்வமான சீர்திருத்தங்களை கொண்டுவரவில்லை என்று குற்றம் சாட்டினார்.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள அரசு தேர்வுகள் முறைகேடு தடுப்பு மசோதா ஒரு கண்துடைப்பு என்றும் திரு கௌரவ் கோகோய் கூறினார்.

*பிஜேபி உறுப்பினர் திருமதி Bansuri Swaraj பேசுகையில், தேர்வுகளை நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதை உறுதி செய்வதற்கு இந்த புதிய சட்டத்திருத்தம் வகை செய்வதாக கூறினார்.*

*தேர்வு முறைகேடுகளில் திட்டமிட்டு ஈடுபடும் கும்பல்களை ஒடுக்குவதற்கு இந்த புதிய சட்டம் வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*வினாத்தாள் கசிவு புகார்களை விசாரிக்க சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது என்றும் திருமதி Bansuri Swaraj கூறினார்.*

*<<<<<<<>>>>>>*

*காவிரியில், தமிழகத்திற்கு வினாடிக்கு மூவாயிரத்து 500 கனஅடி வீதம், 15 நாட்களில் 4 புள்ளி ஐந்து ஏழு டிஎம்சி தண்ணீரை விடுவிக்குமாறு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டுள்ளது.*

*புதுதில்லியில் இன்று நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.*

*<<<<<<<>>>>>>*

*காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கு தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது தமிழக மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2018-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நதிகள் தேசிய சொத்து என்றும், எந்தவொரு மாநிலமும் தனி உரிமை கோர இயலாது என்று குறிப்பிட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*ஆற்றின் மேல்புறத்தில் அமைந்துள்ள எந்தவொரு மாநிலமும் ஆற்றின் கீழ்புறத்தில் உள்ள மாநிலங்களுக்கு திட்டமிட்டபடி நீர் விநியோகம் செய்யப்படுவதை பாதிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என உச்சநீதிமன்ற தீர்ப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*மாநிலங்களின் மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து எழுப்பப் படும் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட மாநில மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு மத்திய அரசு நாடாளுமன்றத்தில் பதிலளிக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.*

*<<<<<<<>>>>>>*

நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் தமிழக மாணவர்களின் பங்கும் மகத்தானது என்று ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 33-ஆவது பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களையும், பதக்கங்களையும் வழங்கி பேசிய ஆளுநர், தமிழகத்தின் கலாச்சாரம் நாட்டிற்கே முன்னோடியாக திகழ்கிறது என்று கூறினார்.

மாணவர்களின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

2047-க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் மாணவர்களின் பங்கும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரசு கொண்டுவரும் திட்டங்களை மாணவர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து வெற்றிகளிலும் தமிழக மாணவர்கள் இருக்க வேண்டும் என தாம் விரும்புவதாகவும் ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பேரிடர் மேலாண்மை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு 50 கோடி ரூபாய் சுழற்சி நிதி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று வெப்ப தாங்கு திறன் கொண்ட தமிழ்நாட்டை நோக்கி என்ற பயிலரங்கை தொடங்கிவைத்து பேசுகையில், பேரிடர் முன்னெச்சரிக்கை, ஆயத்த நிலை, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் முன்கூட்டியே தேவையான நிதி இருக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில்கொண்டு சுழற்சி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை தயாரித்துள்ள தமிழ்நாடு மாநில வெப்ப செயல் திட்டம், நாட்டிலேயே மிகவும் விரிவான செயல் திட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது என்றும் திரு கே ஏ செங்கோட்டையன் கூறினார்.

தமிழகத்தில் வெப்பத்தை தாங்கும் திறன் கொண்ட கட்டிடங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் இந்த பயிலரங்கில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மற்ற மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், மன்னார்வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் 55 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடிய சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தமட்டில் இன்றும் நாளையும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும், நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி செல்சியஸ்ஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸ்ஸை ஒட்டியும் இருக்கக் கூடும் வானிலை அறிக்கை கூறுகிறது.

<<<<<<<>>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

சென்னை மாவட்டத்தில் அடையாறு ஆற்றுப்பகுதி மற்றும் தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயில் தூர்வாரி சீரமைக்கும் பணிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு என், ஆனந்த் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ பெரும்புதூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கோட்ட அளவிலான விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தை மாநில அமைச்சர் திரு தென்னரசு இன்று திறந்து வைத்தார்.

------------

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. அமல்ராஜ், இன்று காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களின் குறைகளை கேட்டறிந்து, அவற்றுக்கு விரைந்து தீர்வு காண சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

----------------

விளையாட்டுத் துறையில் சர்வதேச சாதனை படைத்த சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களிடமிருந்து பத்ம விருதுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31ஆம் தேதிவரை வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் அறிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

உலகக் கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் Sonam Uttam Maskar - Himanshu Dhillon இணை வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

சீனாவின் Hangzhou-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் பத்து மீட்டர் ஏர்ரைபிள் கலப்பு குழு பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

--------------

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இதுவரை 2 தங்கம், ஐந்து வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் எட்டாவது இடத்தில் உள்ளது.

<<<<<<<END>>>>>>